பெருநகர குற்றவியல் நடுவர், 4 வது விரைவு நீதிமன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை –1.
முன்னிலை.திருமதி.A.K.N.சந்திர பிரபா., பி.எஸ்.சி., எம்.எல்.,
STC.No.2759/2022

**புகார்தாரர் தரப்பு 1 வது சாட்சி** நாள்.08.01.2025.

பெயர் – வினய் ஆர் ஜெயின் த/பெ ராஜ்குமார் ஜெயின்

//1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது// சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜரானார்.**

**( மனுவின் பெயரில் சாட்சியம் அழைக்கப்பட்டு அவருடைய சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை (சத்திய பிரமானத்தின் பெயரில்)**

1. புகார்தாரர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு நரேஷ் குமார் மற்றும் அவருடைய தகப்பனார் நன்கு தெரியும். அவர்களை சுமார் 15 வருடங்களுக்கு மேளாக எனக்கு தெரியும். பொதுவாக கடன் கொடுக்கும் போது வட்டியை கழித்துக்கொண்டு வாடிக்கையாளருக்கு கொடுப்பது வழக்கமா என்றால் இல்லை. STC 2759/2022 என்ற வழக்கில் எதிரிக்கு கடனை NEFT மூலமாக கொடுக்கப்பட்டது.

2. மேற்சொன்ன கடனை கொடுத்ததை காட்டும் ஆவணம் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். வங்கி கணக்கு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போன்று எதிரிக்கு கடனை கொடுத்த அன்றே அவர்கள் வட்டியை எனக்கு உடனே செலுத்திவிடுவார்கள். அசல் தொகைக்கு மாதம் மாதம் எதிரி பணத்தை திருப்பி செலுத்தவேண்டும் என்றால் சரிதான். எதிரி எனக்கு ரூ 1,00,000 திருப்பி செலுத்தியதாக புகாரில் கூறியுள்ள நிலையில் கடைசி தவணையாக எப்பொழுது செலுத்தினார் என்றால் தற்போது ஞாபகமில்லை.

3. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 10 தேதிகளான 10.02.2021, 07.11.2022, 23.12.2023, 30.01.2023, 28.02.2023, 24.04.2023, 07.06.2023,

30.09.2023, 30.09.2023 மற்றும் 20.10.2023 தலா ரூ 10,000 எதிரி திருப்பி செலுத்தியுள்ளாரா என்றால் ரூ 1,00,000 செலுத்தியுள்ளார் ஆனால் எனக்கு ஞாபகமில்லை. புதசாஆ–3 ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எதிரி கொடுத்த பணத்தை மற்றும் பாக்கி தொகையை காட்டும் ஆவணமாகும். புதசாஆ–3 ல் குறிப்பிட்டுள்ள காலத்திற்கு பின்பு எதிரி செலுத்திய பணத்தை காட்டும் ஆவணம் என்னால் தாக்கல் செய்ய இயலுமா எ'னறால் ஆம்.

4. எதிரி எனக்கு பணத்தை திருப்பி செலுத்தியுள்ள நிலையில் வட்டி தொகையை திருப்பி செலுத்தியுள்ள விவரத்தின் படி வட்டியுடன் பாக்கி தொகையை எதிரி செலுத்த கடமைபட்டவர் அல்ல என்று சட்ட அறிவிப்பு எதிரி பெற்ற பின்னரும் அதற்கு முன்பாகவும் சமரச பேச்சு நடைபெற்று வழக்கு காசோலை தொகை அதிகமாக வட்டியுடன் குறிப்பிடப்பட்டுள்ளது என்று வாய்மொழியாக பேசப்பட்டு இவ்வழக்கின் காசோலை தொகை இருவரும் ஒப்புக்கொண்டு முழுமையாக எதிரி செலுத்தப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

5. எதிரியிடம் முழு கடன் தொகையையும் பெற்றபின்னர் எதிரியை அலைக்கடிக்கும் நோக்கில் இந்த வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துத் காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக் கொண்ட பின் என் முன்னிலையில் கையொப்பம் செய்தார். |

பெருநகர நடுவர் / விரைவு

நீதிமன்றம்–4, ஜார்ஜ் டவுன், சென்னை –01.